ஹரி ஓம் நம
ஸ்ரீராமஜெயம்
ஸ்ரீ கிருஷ்ண பரப் பிரம்மமே

வில்லிபாரத கடவுள்

# வாழ்த்துக்கள்



வெளியீடு:
ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம்
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

ஸ்ரீராம ஜெயம்

ஸ்ரீ கிருஷ்ணப் பரப் பிரம்மணே நமக

# வில்லிபாரத வாழ்த்துக்கள்

இவை, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான, மகாபாரதம் என்னும் தலைசிறந்த தமிழ்க் காவியத்தில் வருகின்ற கடவுள் வாழ்த்துக்களாகும்.

இவற்றைத் தமிழில் அழகுறப் பாடித் தந்தவர், ஸ்ரீ வைணவ, பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான, வில்லிபுத்தூரில் அவதரித்தவ ராகிய ஸ்ரீ பெரியாழ்வார் ஆவர். இவர் இன்னொரு ஆழ்வாரா கிய, ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரினது தந்தையுமாவர். வில்லிபுத்தூ ரார் பாடியமையால், இவை வில்லிபாரதம் எனச் சிறப்புப் பெறு கிறது.

இப் பாரதக் கதையை, தான் ஏன் பாடினேன் என்றால், அரு மையான மாதவனுடைய (ஸ்ரீமந் நாராயணன்) சரித்திரமும் இடையிடை வருவதால், அவரைப்பற்றி இடையறாது சிந்திக்கலா மென்னுமாசையால் இதைச் செப்பலுற்றேன் என்கிறார். ஆகா! என்னே பெருமை.

ஒவ்வொரு பாடலும், மிக ஆழமான, நுண்ணிய கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன. பகவானுடைய பெருமைகளை மிக எளிமை யாக எடுத்தும் கூறுகின்றன.

இதனுடன், பன்னிரு ஆழ்வார்களுள் பகவானாலேயே 'நம் ஆழ்வார்' என்று சிறப்பிக்கப்பெற்ற, ஸ்ரீ சடகோபாழ்வாரால் பாடப்பட்ட திருவாய்மொழிகளுள், அமுதம் போன்றவற்றைத்தேடி எடுத்துத் தந்துள்ளோம். ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமியின் மகிமைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

நாம் பெற்ற ஆன்மீக இன்பம் நீங்களும் பெறவேண்டுமென்ற நோக்கில், இத் தொகுப்பு நூலை வெளியீடு செய்கிறோம். நீங்க ளும் பாராயணம் செய்யுங்கள். இதுபற்றி உறவினர் நண்பர்களுக் கும் தெரியப்படுத்துங்கள், நலமுடன் வாழ்வீர்கள்.

வாழ்க நாரணன் அடியார்கள்

ஆயர்பாடி ஸ்ரீ ஆழ்வார்கள் ஆச்சிரமம்
மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

ஸ்ரீ

# வில்லி பாரத கடவுள் வாழ்த்துக்கள்

ஆக்குமாறு அயனாம் முதல் ஆக்கிய உலகம்
காக்குமாறு செங்கண் நிறைகருணை அம் கடலாம்
வீக்குமாறு அரனாம் அவை வீந்த நாள் மீளப்
பூக்குமா முதல் எவன் அவன் பொன் அடி போற்றி.

ஏழ் பெருங்கடல் மாநிலம் எங்கும் நல் அறமே
சூழ்க வண் தமிழ் ஓங்குக தேங்குக சுருதி
வாழ்க பைம்புயல் விளங்கும் வளம் கெழு மனுநூல்
வாழ்க அன்புடை அடியவர் மன்னு மாதவமே.

பாண்டவர்கள் புரிந்த தவப்பயன் ஆகி அவதரித்து பகைத்து மேன்மேல்
மூண்ட வினை முழுவதுவும் முனைதோறும் முரண் முருக்கி முகில் புகாமல்
காண்டவமும் கனல் வயிற்றுக் கனல் தணியநுகருவித்து காக்குமாறே
பூண்டருள் எம்பெருமானைப் போற்றுவார் எழுபிறப்பும் மாற்றுவாரே.

மல்கொண்டு வகுத்தனைய சிகரத் திண்தோள்
வாள் அரக்கன் குலத்தோடும் மடிய முன்னம்
வில் கொண்டு சரம் தொடுத்து புரை இல் கேள்வி
விண்ணவர் தம் துயர் தீர்த்த வீர ராமன்
கல்கொண்ட அகலிகை தன் உருவம் மீளக்
கவின் கொள்ளக் கொடுத்த திருக்கமல பாதம்
சொல் கொண்டு துதித்து எழுந்து துள்ளி நாளும்
தொழுமவரே எழுபிறவித் துவக்கு அற்றாரே.

அழுதும் வாள் முறுவல் அரும்பியும் களித்தும்
ஆடியும் பாடியும் மகிழ்ந்தும்
தொழுதும் ஆதரித்தும் விழுந்தும் மேல் எழுந்தும்
துதித்திட தன் பதம் தருவான்
முழுதும் ஆய் ஓங்கும் முச்சுடர் ஆய்
மூலம் ஆய் ஞாலம் ஆய் விண் ஆய்
எழுத ஒணா மறைக்கும் எட்ட ஒணா வடிவத்து
எம்பிரான் உம்பர் நாயகனே.

சேய பங்கயச் சிறுவிரல் அங்கையில் திரட்டிய நறு வெண்நெய்
ஆயர் மங்கையர் இட இட அமுது செய்து ஆடிய திருக்கூத்தும்
நேயமும் குறு முறுவலும் புரிந்து பார்த்தருளிய நெடுங்கண்ணும்
மாயவன் திரு வடிவமும் அழகும் என் மனத்தை விட்டு அகலாவே .

தொழுவார் தம்வினைதீர முன்கோலம் ஆய் வேலை சூழ் பார் எயிற்று
உழுவானை நல்நாமம் ஒன்றாயினும் கற்று ஓர் உரு ஓதினார்
வழுவாத சுரர் ஆக நரர் ஆக புள் ஆக மா ஆக புன்
புழு ஆக ஒன்றில் பிறந்தாலும் நரகில் புகார் காணுமே.

எக்கடலும் எக்கிரியும் எவ் உலகும் உலகில்
தக்க பல யோனிகள் சராசரம் அனைத்தும்
மிக்க விதியால் விதிசெய் விதியினை விதிக்கும்
செக் கமல நாபி முகில் சேவடி துதிப்பாம்.

மீனம் ஆகியும் கமடம் அது ஆகியும் மேருவை எடுக்கும் தாள்
ஏனம் ஆகியும் நர அரி ஆகியும் எண் அருங் குறள் ஆகியும்
கூனல் வாய் மழுத்தரித்த கோஆகியும் அரக்கரைக் கொலை செய்த
வான நாயகன் ஆகியும் நின்ற மால் மலரடி மறவேனே.

பேர்படைத்த விசயனுடன் மும்மை நெடும்
பிறவியிலும் பிரியான் ஆகி
சீர் படைத்த கேண்மையினால் தேர் ஊர்தற்கு
இசைந்து அருளும் செங்கண் மாலை
பார்படைத்த சுயோதனற்கு படை எடேன்
அமரில் எனப் பணித்த கோவை
கார் படைத்த நிறத்தோனை கை தொழுவார்
பிறவு ஆழிக் கரை கண்டாரே.

படர்ந்து கானகம் திரிந்து மீண்டு அன்புடன் பணிந்த பஞ்சவர்க்காக
கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக் கழல் இணை சிவப்பு ஏற
தொடர்ந்து நான் மறை பின்செல பன்னக துவசன் மாநகர்த்தூது
நடந்த நாயகன் கருமுகில் வண்ணம் என் நயனம் விட்டு அகலாதே.

மேவரு ஞானானந்த வெள்ளம் ஆய் விதித்தோன் ஆதி
மூவரும் ஆகி அந்த மூவர்க்கும் முதல்வன் ஆகி
யாவரும் யாவும் ஆகி இறைஞ்சுவார் இறைஞ்ச பற்பல்
தேவரும் ஆகி நின்ற செங்கண்மால் எங்கள் கோவே.

எந்த எந்த யோனி பேதம் எங்கும் எங்கும் உள்ளன
அந்த அந்த யோனி தோறும் ஆவி ஆன தன்மையைச்
சிந்தையின் கண் ஒரு கணத்தில் நிகழுமாறு தேவர்கோன்
மைந்தன் உய்ந்திட புகன்ற வள்ளல் தாள் வணங்குவாம்.

தம்தம் உறியில் அவர்வைத்த தயிர் பால் வெண்ணெய் எட்டாமல்
குந்தி உரலின் மிசை ஏறி இளங் கோபியர் முன் கூத்தாடி
நந்தன் மனையில் அசோதை இரு நயனம் களிக்க விளையாடும்
மைந்தன் இரு தாள் ஒரு நாளும் மறவாதாரே பிறவாதார்.

தேடிய அகலிகை சாபம் தீர்த்த தாள்
நீடிய உலகு எலாம் அளந்து நீண்ட தாள்
ஓடிய சகடு இற உதைத்து பாம்பின் மேல்
ஆடியும் சிவந்த தாள் என்னை ஆண்டதாள்.

கருமா முகில் கோலம் நெஞ்சத்து இருத்தும் கருத்து எய்துமேல்
அரு மாதவன் தானும் அவன் முத்தி தருகைக்கும் அவனே குரு
தரு மாலை மணம் நாறு தாளானை வண்டு ஏறு தண் அம்துழாய்
மரு மாலை புனைகின்ற திருமாலை அல்லாது வல்லார்கள் யார்.

கோயில் ஆளுடைய பைங் கொண்டலார் கண் துயில்
பாயலாய் வாழ நீ பாக்கியம் செய்தது என்
தீ அலாது உவமை வேறு இல் என தீய நின்
வாய் எலாம் நஞ்சு கால் வாள் எயிற்று உரகமே.

உரலும் வேதமும் தொடர நந்த கோனுடன்
அசோதை கண்டு உருக வாழ்வு கலர்
தரணிமீது செங்கையும் மா முழந்தாளும்
வைத்து வைத்து ஆடும் மாயனார்
விரவி நின்ற மா மருதினூடு தாம் மெத்து
எனத் தவழ்ந்து அருளி மீளவும்
புரியும் நீள கடைக்கண்ணும் வண்ணமும்
போற்று வார்கள் மெய் புளகம் ஏறுமே.

பூத்த நாபி அம் தாமரைப் பூவில் வந்துபல் பூதமும்
சேர்த்த நான் முகப் புனிதனும் முனிவர் யாவரும் தேவரும்
ஏத்த நாலு வேதங்களும் தேட நின்ற தாள் எம்பிரான்
பார்த்தன் மாமணித் தேர்விடும் பாகன் ஆனது எப்பான்மையே.

பேர் ஆறு மூழ்கி மறைநூல் பிதற்றி
மிடறும் பிளந்து பிறவித்
தூர் ஆறு மாறு நினையாமல் உங்கள்
தொழிலே புரிந்த சுமடர்
ஓர் ஆறு பேத சமயங்களுக்கும்
உருவாகி நின்ற ஒருவன்
ஈர் ஆறு நாமம் வரை செய்து மண் கொடு
இடுவார்கள் காணும் இமை யோர்.

வலியில் அன்று தந்தை செற்ற மைந்தனுக்கு வந்த பேர்
நலிவு எலாம் அகற்றும் நாமம் நால் இரண்டு எழுத்துடன்
பொலியும் நாமம் மறைகள் சொன்ன பொருள் விளக்கும் நாமம் முன்
கலியன் எங்கள் மங்கை ஆதி கண்டு கொண்ட நாமமே.

காயமும் புலனும் அந்தக் கரணமும் ஆகி எல்லாத்
தேயமும் பரந்து நின்று மீளவும் சித்தும் சுத்த
மாயமும் ஆகி நீங்கி வரு பெரு ஞானானந்தம்
ஆய எம் பெருமான் என்னை ஆண்டருள் ஆழியானே.

பொய்யாத தவமுனி பின் போயருளி தாடகை தன்
மெய் ஆவம் நிகர் என்ன வெஞ்சரத்தால் அழுத்திய பின்
மை ஆழி முகில் வண்ணன் வாங்கியன பூங்கமலக்
கையாலும் ஒரு சாபம் காலாலும் ஒரு சாபம்.

சங்கை இலா வகை யமபடரால் உயிர் தளர் பொழுதத்து அருகே
மங்கையர் சூழ இருந்து அழுது உள்ளம் மயக்கினும் யான் மறவேன்
கங்கையும் நான் மறையும் துளவும் கமழ் கழல் இணையும் திருமால்
அங்கையின் மீது ஒளிர் சங்கமும் நேமியும் அஞ்சன மேனியுமே.

அரிய தண் கலை வாள் மதியமும் கொதி கொள்
ஆலமும் தனது இடத்து அடக்கி
உரிய ஒண் கங்கா நதிக்கு ஒரு பதியாய்
உரை பெறும் உயர் மகோததியின்
பரிய திண் சிலையோடு அம்பு எலாம் முகந்து
பற்குணப் பொருப்பிடைப் பொழியும்
கரிய பைம் புயலைக் கைதொழுமவரே
கருவிலே திருவுடையவரே.

சித்து அசித்தொடு ஈசன் என்று செப்புகின்ற மூவகைத்
தத்துவத்தின் முடிவு கண்ட சதுர்மறைப் புரோகிதன்
கொத்து அவிழ்த்த சோலை மன்னு குருகை ஆகி நெஞ்சிலே
வைத்த முத்தி நாதன் அன்றி வான நாடர் முதல்வன் யார்.

மாதுலன் ஆகியும் ஏதிலன் ஆகிய வஞ்சகன் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன் உயிர் முலைபொழி பாலொடு போதர உண்ட புயல்வண்
மாதவ யாதவ வாசவ கேசவ மாயர் ஆயா மது சூதா [ணா
ஆதியும் அந்தமும் ஆகிய நின்புகழ் அல்லாது உரையேன் அடியேனே.

ஈர்ஒரு பிறப்பின் ஒரு சிறு குறளாய்
யாவரும் தேவரும் வியப்ப
கார் ஒரு வடிவு கொண்டெனச் சென்று
காவல் கலர் மாவலி அளித்த
நீர் ஒரு கரத்தில் வீழும் முன் தரங்க
நீல் நிற மகர நீர் உடுத்த
பார் ஒரு கணத்தில் அளவிடும் கமல
பாதனார் நாயனார் தமக்கே.

மீன் ஆமை கோலம் நெடுநரசிங்கம் ஆகி நிலம்
விரகால் அளந்த குறளாய்
ஆனாது சீறும் மழு வல்வில்லும் வெல்லும் முனை
அலம் உற்ற செங்கையவராய்
வான் நாடர் வந்து தொழ மண்நாடர் யாவரையும்
மகிழ்விக்க வந்த வடிவாய்
நானா விதம் கொள் பரி ஆள் ஆகி நின்று அருளும்
நாராயணாய நமவே.

## மிகைப் பாடல்கள்

வான் நாறு பெருஞ் சீர்த்தி வளர் குருகை நம்பொருட்டு வந்துதெய்வக்
கான் நாறு நறுந்துணர்வான் திருப்புளிக்கீழ் அமர்ந்து நனிகருணை
பூத்து
தேன் நாறு தமிழ் மறை முன் கிளர்ந்தருளும் சிறுமுனிவன் செழு
மெய்ஞ்ஞானப்
பால் நாறு பத கமலம் நமது பதக மலம் அறப் பழிச்சு வாமால்.

எவன் சொல் வாய்மையது என்று அருமறை எடுத்து இயம்பும்
எவன் கொல் சாநவிப்புடைக் கரம் உயர்த்தி மெய் இசைத்தான்
எவன் பொன்றாப் பரஞ்சுடர் ஒரு சலறு என இயைவான்
அவன் செம்மாண் அடி அடைதும் நல் அருள் பெறற் பொருட்டே.

அரிய கங்குலில் அன்னைதன் வடிவு கொண்டு அலகை ஆகிய நங்கை
பரிவு பொங்க வந்து எடுத்து அணைத்து உவந்து உளம்பரிந்து உடன்
பாராட்ட
உருகு மாமுலைப் பாலுடன் அவள் உயிர் உண்டு அழும்முருகு
ஆர்மெய்க்
கரிய கோவலன் செய்ய தாள் மலர்கள் என் கருத்தை விட்டு அகலாவே.

அருமறை முதல்வனை ஆழிமாயனை
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனை
திருமகள் தலைவனை தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

சீத நாள் மலர்க் கோயில் மேவு செந்திருவின் நாயகன் தேவநாயகன்
வேத நாயகன் பூத நாயகன் விரத நாயகன் விபுத நாயகன்
போதகாதிபன் முதலைவாயிடைப் பொறைதளர்ந்து முன்பொது
விலே நினைந்து
ஆதிமூலமே என்ன முன்வரும் ஆதி நாயகன் அடி வணங்குவாம்.

தண்டு சக்கரமும் சங்கும் சார்ங்கமும் தரித்தோன் வானில்
அண்டர் முனிவர்கள் போற்றும் அச்சுதன் அரவின் மீதே
கண்துயில் கருணை மாயன் கருட வாகனத்தில் ஏறும்
புண்டரீகக் கண்ணானைப் போற்றுவார் வினைகள் போமே.

குண்டலம் இலங்க சங்கும் ஆழியும் குலவு காந்தி
மண்டலம் துதிக்கும் திங்கள் இரவிமேல் வடிவம் தூண்ட
விண்தலத்து இலங்கு பீத அவுணனை வெறுத்து வீழ்த்த
புண்டரிகங்கள் பூத்த புயலினைப் போற்றி செய்வாம்.

வேதமும் வேதம் விளம்பு மெய்ப் பொருளும் அப்பொருள் விதங்
களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனும் அப்பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும் உலகம் படைத்து அளித்து அழித்து ஞானமாய் அகிலமும்
நிறைவுற்று
ஆதியும் நடுவும் முடிவுமாய் நின்ற ஆதியான் அடிஇணை பணிவாம்.

அருமா மறை உணராது அலமரு சேவடி அருளால்
இரு மாநில மிசை தோய்வுற இயல் ஆனிரை வழிபோய்
திரு மாநிகர் இடை மாதர்கள் திகழ் வேல் விழி மகிழ
வரு மாதவன் விளையாடலை மறவாது எனது உளமே.

அரிய மாமறை அறைந்த தொல் அறநெறி அந்தணர்தமை காப்பான்
விரிய நீடு தீ நெறி மறைக்கடை செலும் வெய்யரைச் செகுப்பான் சீர்
தெரிய மாஇரு ஞால மீமிசை வருதிரு மலி புகழ் சாலும்
கரிய கோவலன் சேவடி அல்லன கருத்தினுக்கு இணங்காவே.

ஞானம் ஆகிய பரம்பர அமிழ்தம் ஆய்நவிர் மறுமயக்கு ஆதி
வானம் ஆய் உடன் வாயு ஆய் தேயு ஆய் வனமும் ஆய் மண் ஆகி
தான மாமறை முறைமையின் பற்பல சராசரங்களும் ஆகி
ஏனம் ஆய் இவை அனைத்தையும் மருப்பினால் ஏந்தினான் எனை
ஆண்டோன்.

அண்டருக்கு அமுதம் அன்னான் அவுணர் பால் அரி ஏறு ஒப்பான்
தெண் திரைக்கு ஒருவன் நெஞ்சத் திருவினன் மருவினோர் பால்
புண்டரிகத்த பாதம் பொருத்துவன் புவனம் மூன்றும்
உண்டெனப் பூத்தோன் நாமம் இயற்றி யான் உரைக்கலுற்றேன்.

செய்ய வாய் கரிய வாட்கண் சிற்றிடை பெருந்தேர் அல்குல்
துய்ய ஆய் மகள் தன் முன்றில் தொகு மருது இறுத்து தாரு
வைய மீமிசை நட்டு ஓர் புள் வகிர்ந்து பொற்சிறைப் புள் ஊரும்
ஐயனே அன்றோ தொல்லை அருமறைக்கு இறுதியாவான்.

ஆழ்மறை துணிந்த பொருள் ஆகும் அவன் என்னல்
ஊழ் உற உணர்ந்த முதியோர்கள் துணிபு அன்றோ
கேழ் இல் பல அண்டம் முன் நுகர்ந்து கிளர் செவ்வாய்
ஆழி மணி வண்ணன் அடி அடைகுதும் விரைந்தே.

தன்னை உணரா ஒத்து அரற்ற தடந்தாமரைகள் சிவப்புஏற
மின்னை அனையாளொடு கான் செல்விற் சேவகனை கௌசலையாம்
அன்னை புரிந்த தவப்பயனை யாரேயாக அடி பணிந்தார்
பின்னை உலகின் ஒருநாளும் பிறவார் வினையின் இறவாரே.

திரு மறு மார்பனை செய்ய வாயனை
கரு முகில் வண்ணனை கமலக் கண்ணனை
திரு மகள் தலைவனை தேவ தேவனை
இரு பத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.

சோகம் தீர தீமை எலாம் துறப்ப மறந்து நினைந்தோர்க்குப்
போகம் வேண்டின் பொருள் வேண்டின் புகழே வேண்டின் பொன்மலர்
சேர்
நாகம் வேண்டின் கதி வேண்டின் நல்க அறிந்து ஈண்டு இனி மீளத்
தேகம் வேண்டின் தர அறியாத் திருமால் அடிகள் சிந்திப்பாம்.

அங்கையில் நேமிசங்கு வாள் தண்டோடு அடல் சராசனம் தரித்தருள்
வோன்
சங்கைஇல் மறைகள் ஆயிரங்களுக்கும் சாற்றுதற்கு அரிய தத்துவத்
தோன்
கங்கையின் அறலும் காளியன் முடியும் காளிந்திக் கரையுமே கமழும்
பங்கைய மலர்கள் இரவும் நண்பகலும் பணிந்து பாடுதும்அவன்புகழே.

பங்கயனை உள்ளிட்ட பற்பல் உயிர்த்தொகை பிறமுன் படைத்துக்
காத்துச்
சங்கை அற நீத்து வரு பெரு நீத்தம் தனில் ஆலின் தமாலம் மேவி
நங்கை செழு மலர் மங்கை நனி மகிழ மீட்டும் அவை நல்கும் அண்ணல்
கங்கையொடு பழமறையும் துணர்த் துளவும் கமழ் கழற்கால் கருத்
துள் வைப்பாம்.

திரு வளர் புதுவைக் கோதை தேன் குழல் பூத்த மாலை
உரு வளர் பவளம் பூத்த ஒண் தமிழ் மாலை வேய்ந்த
பெரு வளர் வரைத்தோள் மாலைப்பேணி செம்பதுமத் தாள்கள்
கரு வளர் மாலை வீப்பான் கருத்தினில் இருத்தல் செய்வாம்.

கரு முகில் அனைய வடிவமும் செய்ய கண்மலர்க் கருணையின் எழிலும்
திரு வளர் மார்பும் பங்கயக் கரமும் திருநடம் புரியும் இங்கிதமும்
மரு வளர் வெண்நெய் அருந்திய வாயும் மகிழ்ந்திடு முறுவலின்
இயல்பும்
இரு பொழுதினும் என் இதயம் உற்று ஆளும் தாளும் எந்நாளும்
நான் மறவேனே.

அராஅணை துறந்து போந்து அன்று அசோதை கண்களிப்ப நீடு
தராதலம் விளங்க வெண் நெய்தாழி சூழ்தர நின்று ஆடி
குராமணம் கமழும் கூந்தல் கோபியர் குரவை கொண்ட
புராதனன் தனையே ஏத்தும் புனிதர்தாள் போற்றி செய்வாம்.

பராவ அரு மறைகள் ஓதும் பரம மா ஞான மூர்த்தி
கராசலம் மூலம் என்ன கராவினைத் தடிந்த சோதி
தராதலம் முதலாயுள்ள சகத்து உயிர் அனைத்தும் காக்க
அரா அணைத்துயிலும் நீத்தான் அடித்தலம் முடிக்கொள்வாமே.

ஒரு குலத்திடை அவதரித்து அணிபொதுவர் சிற்குடில் உறைவது ஓர்
மரகதப் புயல்தனை எடுத்து ஒரு மகவு எனத்தனது இறுதியால்
அரிது பற்றிய அலகை செற்றிட அணிமுலைப் பயம் நுகர்வுறு
மருது இடைத்தவழ் பொருள்இல் வித்தகன் மலர் அடித்துணை
வாழ்த்துவாம்.

முன்னமே துயின்றருளிய முது பயோததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சை ஆல் இலையோ
சொன்ன நால் வகைச் சுருதியோ கருதி நீ எய்தற்கு
என்ன மாதவம் செய்தது இச் சிறு குடில் என்றான்.

முன்னும் மாமறை முனிவரும் தேவரும் பிறரும்
பன்னும் மாமொழிப் பாரதப் பெருமையும் பாரேன்
தன்னும் மாதவன் சரிதமும் இடை இடை வழங்கும்
என்னும் ஆசையால் யானும் ஈது இயம்புதற்கு இசைந்தேன்.

வாழி வலம்புரி தண்டு எரி சக்கரம் வாள் அரி கைப்படையும்
வாழி நெடுஞ்சிலை வாழி அடுங்கணை வாழி மலர்ப்பதுமம்
வாழி தலம் புகழ் வாழி சவுந்தரி வாழி மலர்ந்திருவும்
வாழி நலம் திகழ் பாடல்கள் ஏற்றுவர் வாழிதரித்தவரே.

ஹரி ஓம் தத் சத்.

சிரத்தை தவம் வேள்வி ஓணா செப்பிய ஒவ்வொன்றும்
இருத்து குணத்தால் மூன்றாம் என்றும் - கருத்துயரும்
ஓம் தத்சத் என்னும் உரைப்பொருளும் உற்றுரைப்பான்
பூந்துளவத் தாளனருள் பூண்டு.

ஹரி ஓம் தத் சத்.

★

வாடினேன்வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயரிடும்பையில் பிறந்து
கூடினேன்கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்நாடி நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

— பெரிய திருமொழி

ஸ்ரீராம ஜெயம்

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய் மொழி

## 1ம் திருவாய் மொழி

(கமாஸ்ராகம் — ஆதிதாளம்)

உயர்வறவுயர் நலம் உடையவன் எவன்அவன்
மயர் வற மதிநலம் அருளினன் எவன்அவன்
அயர் வறும்அமரர்கள் அதிபதி எவன்அவன்
துயரறு சுடரடி தொழு தெழு என்மனனே.

மனன கமலமற மலர் மிசை யெழுதரும்
மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்
இனனுணர் முழுநலம் எதிர்நிகழ் கழிவினும்
இனனிலனெனனுயிர் மிகு நரையிலனே.

இலன துடையனிது என நினைவரியவன்
நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன்
புலனொடு புலனலன் ஒழிவிலன் பரந்த அந்
நலனுடையொருவனை நணுகினம் நாமே.

நாமவனிவனுவன் அவளிவளுவ ளெவள்
தாமவரிவருவர் அது விதுவுது வெது
வீமவையிவையுவை அவை நலம் தீங்கவை
ஆமவையாயவை ஆய் நின்ற அவரே.

அவரவர் தமதமது அறிவறி வகை வகை
அவரவர் இறையவர் என அடியடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர்
நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர்
என்று மொரியல்வினர் எனநினை வரியவர்
என்று மொரியல் வொடு நின்ற வெந்திடரே.

திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவைமிசை
படர்பொருள் முழுவதுமாய் அவையவை தொறும்
உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே.

சுரரறி வருநிலை விண்முதல் முழுவதும்
வரன் முதலாயவை முழுதுண்ட பரபரன்
புரமொரு மூன்றெரித்து அமரர்க்கும் அறிவியந்து
அரனயனென உலகழித்தமைத் துளனே.

உளனெனில் உளன் அவனுருவம் இவ்வுருவுகள்
உளனலனெனில் அவனருவம் இவ்வுருவுகள்
உளனென இலனென இவை குணமுடைமையில்
உளனிரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே.

பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்
பரந்த அண்டமிதென நிலவிசும் பொழிவற
கரந்த சிலிடந்தோறும் இடந்திகழ் பொருள் தொறும்
கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்டகரனே

கரவிசும் பெரிவளி நீர் நில மிவை மிசை
வரனவில் திறல்வலி அளிபொறையாய் நின்ற
பரனடிமேல் குருகூர்ச் சடகோபன் சொல்
நிரனிறையாயிரத்து இவை பத்தும் வீடே.

ஸ்ரீ நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

உயர்வே பரன்படியை உள்ளதெல்லாம் தான் கண்டு
உயர்வேதம் நேர் கொண்டுரைத்து — மயர்வேதும்
வாராமல் மானிடரை வாழ்விக்கும் மாறன் சொல்
வேராகவே விளையும் வீடு.

ஸ்ரீ ஜீயர் பெருமான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீராம ஜெயம்

ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச் செய்த

# பத்தாந் திருமொழி

(ஆரபிராகம் — ஆதிதாளம்)

துப்புடையாரை யடைவதெல்லாம்
சோர்விடத்துத் துணை யாவரென்றே
ஒப்பிலே னாகிலும் நின்னடைந்தேன்
ஆனைக்கு நீயருள் செய்தமையால்
எய்ப்பென்னை வந்து நலியும் போது
அங்கேதும் நானுன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளியானே. 1

சாமிடத் தென்னைக் குறிக்கொள் கண்டாய்
சங் கொடு சக்கர மேந்தினானே
நாமடித் தென்னை யனேக தண்டஞ்
செய்வதா நிற்பர் நமன்றமர்கள்
போமிடத்துன்திறத் தெத்தனையும்
புகா வண்ணம் நிற்பதோர் மாயை வல்லை
ஆமிடத்தே யுன்னைச் சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளியானே. 2

எல்லையில் வாசல் குறுகச் சென்றால்
எற்றி நமன்றமர் பற்றும் போது
நில்லுமினென்னு முபாய மில்லை
நேமியுஞ் சங்கமு மேந்தினானே
சொல்லலாம் போதேயுன் நாமமெல்லாஞ்
சொல்லினே னென்னைக் குறிக்கொண்டென்றும்
அல்லற் படா வண்ணங் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளியானே. 3

ஒற்றை விடையனும் நான் முகனும்
உன்னை யறியாப் பெருமையோனே
முற்றவுல கெல்லாம் நீயே யாகி
மூன்றெழுத்தாய முதல்வனேயோ

அற்றது வாணாளிவற் கென்றெண்ணி
அஞ்ச நமன்றமர் பற்றலுற்ற
அற்றைக்கு நீ யென்னைக் காக்க வேண்டும்
அரங்கத்தர வணைப் பள்ளியானே. 4

பையர வின்னணைப் பாற்கடலுள்
பள்ளி கொள்கின்ற பரமமூர்த்தி
உய்ய வுலகு படைக்க வேண்டி
யுந்தியில் தோற்றினாய் நான்முகனை
வைய மனிதரைப் பொய்யென் றெண்ணிக்
காலனையு முடனே படைத்தாய்
ஐயா, இனியென்னைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளியானே. 5

தண்ணென வில்லை நமன்றமர்கள்
சாலக் கொடுமைகள் செய்யா நிற்பர்
மண்ணொடு நீரு மெரியுங் காலும்
மற்று மாகாசமும் ஆகி நின்றாய்
எண்ணலாம் போதேயுன் நாமமெல்லாம்
எண்ணினேன் என்னைக் குறிக் கொண்டென்றும்
அண்ணலே நீ யென்னைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளியானே. 6

செஞ்சொல் மறைப் பொருளாகி நின்ற
தேவர்கள் நாயகனே எம்மானே
எஞ்சலி லென்னுடை யின்னமுதே
ஏழுலகும் முடையாய் என்னப்பா
வஞ்ச வுருவின் நமன் தமர்கள்
வலிந்து நலிந்தென்னைப் பற்றும் போது
அஞ்சல மென்றென்னைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளியானே. 7

நானேது முன்மாய மொன்றறியேன்
நமன்தமர் பற்றி நலிந்திட்டு இந்த
ஊனே புகேயென்று மோதும் போதங்
குன்னை நானொன்றும் நினைக்க மாட்டேன்
வானேய் வானவர் தங்களீசா
மதுரைப் பிறந்தமா மாயனே என்
ஆனாய் நீ யென்னைக் காக்க வேண்டும்
அரங்கத்தரவணைப் பள்ளியானே. 8

குன்றெடுத்தா நிரை காத்த மாயா
கோநிரை மேய்த்தவனே எம்மானே
அன்று முதலின் றுறுதியாக
ஆதியஞ் சோதி மறந்தறியேன்
நன்றுங் கொடிய நமன்றமர்கள்
நலிந்து வலிந்தென்னைப் பற்றும்போது
அன்றங்கு நீயென்னைக் காக்க வேண்டும்
அரங்கத் தரவணைப் பள்ளியானே. 9

மாயவனை மதுசூதனனை
மாதவனை மறை யோர்களேத்தும்
ஆயர்களேற்றினை அச்சுதனை
அரங்கத் தரவணைப் பள்ளியானை
வேயர் புகழ்வில்லி புத்தூர்மன்
விட்டுச் சித்தன் சொன்ன மாலை பத்தும்
தூய மனத்தனராகி வல்லார்
தூமணி வண்ணனுக்குக் காளர்தாமே. 10

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச் செய்த

## திருவாய் மொழி

பண்—கொல்லி தாளம்—ஏழொத்து

சூழ்விசும் பணிமுகில் தூரியம் முழக்கின
ஆழ்கடலலை திரை கையெடுத்தாடின
ஏழ்பொழிலும் வளமேந்திய — என்னப்பன்
வாழ் புகழ் நாரணன் தமரைக் கண்டுகந்தே.

நாரணன் தமரைக்கண்டுகந்து நன்னீர் முகில்
பூரண பொற்குடம் பூரித்த துயர் விண்ணில்
நீரணி கடல்கள் நின்றார்த்தன — நெடுவரைத்
தோரணம் நிரைத்தெங்குத் தொழுதனருலகே.

தொழுதன ருலகர்கள் தூபநன் மலர்மலை
பொழிவனர் பூமியன்றளந்தவன் தமர் முன்னே
எழுமினென்றிரு மருங்கிசைத்தனர் முனிவர்கள்
வழியிது வைகுந்தற் கென்று வந்தெதிரே.

எதிரெதிரிமையவரிருப்பிடம் வகுத்தனர்
கதிரவரவரவர் கைநிரை காட்டினர்
அதிர்குரன் முரசங்களலைகடல் முழக்கொத்த
மதுவிரி துழாய்முடி மாதவன் தமர்க்கே.

மாதவன் தமரென்று வாசலில் வானவர்
போதுமினெமதிடம் புகுதுக வென்றலும்
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
வேதநல் வாயவர் வேள்வியுண் மடுத்தே.

வேள்வியுண் மடுத்தலும் விரை கமழ்நறும்புகை
காளங்கள் வலம்புரி கலந்தெங்கு மிசைத்தனர்
ஆண்மின்கள் வானகம் ஆழியான் தமரென்று
வாளொண்கண் மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே.

மடந்தையர் வாழ்த்தலு மருதரும் வசுக்களும்
தொடர்ந்தெங்குந் தோத்திரஞ்சொல்லினர் – தொடுகடற்
கிடந்தவெங் கேசவன் கிளரொளி மணிமுடி
குடந்தையெங் கோவலன் குடியடி யார்க்கே.

குடியடி யாரிவர் கோவிந்தன்றனக் கென்று
முடியுடை வானவர் முறைமுறை யெதிர் கொள்ளக்
கொடியணி நெடுமதிட் கோபுரங் குறுகினர்
வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே.

வைகுந்தம் புகுதலும் வாசலில் வானவர்
வைகுந்தன் தமரென ரெமதிடம் புகுதென்று
வைகுந்தத் தமரரும் முனிவரும் வியந்தனர்
வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே.

விதி வகை புகுந்தன ரென்றுநல் வேதியர்
பதியினிற் பாங்கினிற் பாதங்கள் கழுவினர்
நிதியுநற் சுண்ணமும் நிறைகுட விளக்கமும்
மதிமுக மடந்தைய ரேந்தினர் வந்தே.

வந்தவ ரெதிர்கொள மாமணி மண்டபத்து
அந்த மில் பேரின்பத் தடியரோ டிருந்தமை
கொந்தலர் பொழிற்குரு கூர்ச்சடகோபன் – சொல்
சந்தங்க ளாயிரத்திவை வல்லார் முனிவரே.

ஸ்ரீ நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

சூழ்ந்து நின்ற மால் விசும்பிற்றொல்லை வழிகாட்ட
ஆழ்ந்ததனை முற்று மனுபவித்து - வாழ்ந்தங்
கடியருடனேயிருந்த வாற்றையுரை செய்தான்
முடிமகிழ்சேர் ஞான முனி.

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்.

★ ★

**துன்பம் துயர்கள் இல்லாமல் போக......**

**எல்லா அறங்களையும் விட்டொழித்து இங்கென்றனையே**
**நல்லாய் சரண்புகுக நானுன்னை அல்லல் தரு**
**பாவங்களினின்றும் பற்றறவே விடுவிப்பேன்**
**மேவுதுயர் எல்லாம் விடு.**

**— கீதைவெண்பா.**

# 3ம் திருவாய்மொழி

பண்-நட்டபாஷை தாளம்: ஏழொத்து

பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக்கரிய
வித்தகன் மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரலிடை யாப்புண்டு
எத்திறம் உரலினோடிணைத்திருந் தேங்கிய வெளிவே.

எளிய வருமியல்பினன் நிலைவரம்பில பலபிறப்பாய்
ஒளி வரு முழு நலம் முதலில கேடில வீடாம்
தெளிதரு நிலைமைய தொழிவிலன் முழுவதுமிறையோன்
அளிவருமருளி னோடகத்தனன் புறத்தன னமைந்தே

அமைவுடையற நெறி முழுவதுமுயர்வற வுயர்ந்து
அமைவுடை முதல்கெட லொடி விடையற நிலமதுவாம்
அமைவுடை யமரரும் யாவையும் யாவரும் தானா
மவை முடை நாரணன் மாயையை யறிபவர் யாரே

யாருமோர் நிலைமைய னென வறி வரிய வெம் பெருமான்
யாருமோர் நிலைமைய னென வறி வெளிய வெம்பெருமான்
பேருமோராயிரம் பிரபல வுடைய வெம் பெருமான்
பேருமோ ருருவ முமுண நிலை யிலதிலை பிணக்கே

பிணக்கற வறு வகைச் சமயமும் நெறியுள்ளியுரைத்த
கணக்கறு நலத்தன னந்தமிலாதியம் பகவன்
வணக் குடைத் தவநெறி வழிநின்று புறநெறிகளை கட்டு
உணக்கு மின் பசையற வவனுடையுணர்வு கொண்டுணர்ந்தே

உணர்ந்துணர்ந் திழிந்தகன்றுயர்ந்துருவியந்தவிந்நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலு மிறைநிலை யுணர் வரிதுயிர்காள்
உணர்ந்துணர்ந்துரைத்துரைத் தரியய னரனென்னுமிவரை
உணர்ந்துணர்ந் துரைத்துரைத் திறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே.

ஒன்றெனப் பலவென வறிவரும் வடி வினுள் நின்ற
நன்றெழில் நாரணன் நான்முகர னெனு மிவரை
ஒன்றநும் மனத்து வைத்துள்ளி நும்மிரு பசையறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே.

நாளுநின்றடு நம் பழைமையங் கொடு வினையுடனே
மாளும் ஓர் குறைவிலை மனன கமலமறக் கழுவி
நாளுநந் திருவுடையடிகள் தம் நலங்கழல் வணங்கி
மாளுமோரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே.

வலத்தனன் திரிபுர மெரித்தவனிடம் பெறத்துந்தித்
தலத்து எழு திசை முகன் படைத்த நல்லுலக மும் தானும்
புலப்படப் பின்னும் தன்னுலகத் திலகத்தனன் தானே
சொலப்புகிலிவை பினும் வயிற்றுள விமையவன் துயக்கே.

துயக்கறு மதியில் நன் ஞானத்துள மரரைத் துயக்கும்
மயக்குடை மாயைகள் வானிலும் பெரியன வல்லன்
புயற் கருநிறத்தனன் பெருநிலங்கடந்த நல்லடிப் போது
அயர்ப்பில னலற்றுவன் தழுவுவன் வணங்குவனமர்ந்தே.

அமரர்கள் தொழுதெழுவலைகடல்கடைந்தவன் றன்னை
அமர்பொழில் வளங்குரு கூர்ச்சட கோபன் குற்றே வல்
அமர்சுவை யாயிரத் தவற்றினு ளிவை பத்தும் வல்லார்
அமரரோடுயர் விற் சென்றறுவர் தம் பிறவியஞ்சிறையே.

ஸ்ரீ ஆழ்வார் திரு வடிகளே சரணம்!

பத்துடையோர்க் கென்றும் பர னெளியனாம் பிறப்பால்
முத்திதரும் மாநிலத்தீர் மூண்டவன் பால் பக்திசெயும்
என்றுரைத்த மாறன்றனின் சொல்லால் போம் நெடுகச்
சென்ற பிறப்பாஞ் சிறை.

ஸ்ரீ ஜீயர் திருவடிகளே சரணம்!

---

**துன்பங்கள் தீவினைகளை எரித்துத்தள்ள......**

ஆன்மாவுக்கோர் செயலுமில்லை யிவையாவும் உடல்
தான் மருவும் என்னும் தகைதன்னை பான்மையினால்
ஒருவதே ஞானமென உற்றிறைவன் ஓதியதைத்
தேருவதே தீ வினைக்குத் தீ.

— கீதை வெண்பா

---

ஸ்ரீ ராமஜெயம்

## ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமிகளின்



# மகிமைகள்

ஆஞ்சநேய சுவாமியினுடைய சிறப்பே தனித்துவமானது, அவர் பக்தர்களுக்கு வழங்கும் அருட்குணங்களை நோக்குமிடத்து அவரிடமுள்ள சிறப்பு என்னவென்பது தெளிவாகும்.

புத்தி, பலம், புகழ், உறுதிப்பாடு, அஞ்சாநெஞ்சம், உடற்சுகம், விழிப்பு, வாக்கு வன்மை ஆகிய இத்தனையையும் அவரை நினைக்கும் அடியார்களுக்கு அவர் வழங்குகின்றார்.

இத்தனை அருட்சிறப்புக்களும் சாதாரணமாக ஓர் இடத்திலே வந்து அமைவதில்லை.

நல்ல புத்தியுடையவன் தேகசுகமின்றி இளைத்தவனாக இருப்பான், பெரிய பலசாலி புத்தியற்றவனாக இருப்பான், புத்தியும் தேக சுகமும் உடையவன் கோழையாக, பயந்த சுபாவமுடையவனாக இருப்பான். எத்தனைதிறமைகள் இருந்தாலும் அவற்றைப் பிரயோகிக்கிற சுறுசுறுப்போ விழிப்போ இல்லாமல் சோம்பேறியாக இருப்பான். பெரிய அறிவாளியாக இருந்தாலும் தனக்குத் தெரிந்தவற்றைப் பிறர்க்குஎடுத்துச் சொல்லும் வாக்குவன்மை இல்லாமல் இருப்பான் இம்மாதிரி ஏற்றத்தாழ்வான குணங்கள் இல்லாமல் எல்லா குணங்களையும் ஒரே இடத்திலே பொழிகிறார் ஆஞ்சநேயர்.

இவ்வாறு பொழிவதற்குக் காரணம், சாதாரணமாக ஒரே இடத்திலே சேர்ந்திருக்கக் காணமுடியாத அத்தனை குணங்களும் சக்திகளும் அவர் ஒருவரிடமே பூரணமாக ஒன்று சேர்ந்திருப்பதேயாகும்.

எதிரெதிர் குணங்கள் எனக் கருதப்படுவனகூட அவரிடத்தே ஒன்று சேர்ந்து அமைதி பெறுகின்றன.

உதாரணமாக, பலசாலியிடம் பணிவு இருக்காது, பெரிய புத்தி சாலிக்கு அகங்காரமில்லாத பக்தி இராது, தேகபலத்தையும் புத்தி பலத்தையும் கொண்டுள்ள ஆஞ்சநேயரோ பக்தி, பணிவு ஆகியவற்றிலும் முதன்மையாக நிற்கிறார்.

மகா சக்திமானாக இருந்தும், அத்தனை சக்தியும் ''ராமன் போட்ட பிச்சை'' என்ற அடக்கத்தோடு தனக்கு ஒருபதவியுங் கேளாமல் இராமதாசனாகவே இருந்தார். அப்படி அடிமையாக இருந்ததாலேயே அவர் நிறைந்து இருந்தார்.

பக்தி உள்ளவர்களுக்குக்கூட, அப்பக்தி ஞானத்தின் தெளிவு இல்லாமல் மூடப் பக்தியாகவோ, முரட்டு பக்தியாகவோ இருப்பதுண்டு. ஞானமும் பக்தியும் வேறுவேறு என்றே அவர்கள் சண்டைபோட்டு கொள்வார்கள்.

ஆஞ்சநேயரோ ராமச்சந்திர மூர்த்தியின் பரமபக்தராக இருக்கும்போதே பரம ஞானியாகவும் இருந்தார். தக்ஷிணாமூர்த்தி எப்படி ஸநகாதி முனிவர்களை முன்னிட்டு உபதேசம் செய்கிறாரோ அப்படியே ஸ்ரீராமனும் ஆஞ்சநேய சுவாமியை முன்னால் வைத்துக் கொண்டே ஞானோபதேசம் செய்கிறார் என்று 'வைதேகி ஸஹிதம்' என்னும் சுலோகம் கூறுகிறது,

அர்ச்சுனனுடைய தேர்க்கொடியிலே இருந்து கொண்டு கீதோபதேசத்தை நேரிலேயே கேட்டவர் அவர். பைசாசமொழியிலே கீதைக்குத் தத்துவமயமான ஒருவிளக்கவுரை இருப்பதாகவும் அது ஆஞ்சநேயராலே இயற்றப்பட்டதென்றும் கூறுவார்கள்.

ஒன்பது இலக்கணங்களும் (வியாகரணம்) தெரிந்த 'நவவ்யாகரணவேத்தா' என்று ராமரே புகழ்கின்ற அளவுக்கு அவர் ஒரு பெரிய கல்விமான். எனினும் அவர் தன்னுடைய புத்தி ஒளியினையும் சக்தி வேகத்தினையும் அடக்கிக்கொண்டு,பக்தியிலேயே பரமானந்தம் அநுபவித்தார்.

பக்தி என்பதால் உலக காரியங்களைக் கவனியாது விட்டார் என்று கூறமுடியாது மகா பௌருஷத்தோடுபோராடி,அபலைகளைக் காப்பாற்றியவர்களில் அவருக்கு எவருமே இணை இல்லை உலக சேவைக்கு அவரே உதாரணம்.

ஞானத்தில் உச்சநிலை; வீரத்தில் உச்சநிலை; கீர்த்தியில் உச்ச நிலை; சேவையில் உச்சநிலை; பணிவில் உச்சநிலை, இப்படி எல்லாம் ஒன்று சேர்ந்திருக்கின்ற சுயவடிவம் ஒன்று உண்டு என்றால் அது ஆஞ்சநேய சுவாமிதான்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவருடைய பிரம்மச்சரியம் பற்றிக் கூறவேண்டும். ஒரு கணமேனும் காமம் என்கிற நினைப்பே வராத மகா பரிசுத்த மூர்த்தி அவர், தனக்கென்று எதுவுமே நினைக் காதவர். ஒரு காமனையும் இல்லாமல் ராமனுக்கு சேவை செய்தே நிறைந்து விட்டார்.

அவரை நம்முடைய நாட்டில் பொதுவாக 'அநுமார்' என்போம் கன்னட தேசத்தில் அவர் 'ஹநுமந்தையா! எனப்படுவர். சித்தூருக்கு வடக்கே ஆந்திரா முழுவதும், ஆஞ்ச நேயலு' என்பார்கள் மகா ராஷ்டிரம் முழுக்க 'மாருதி மாருதி' என்று கொண்டாடுவார்கள், அதற்கும் வடக்குப் பக்கத்தில் வாழ்பவர்கள் 'மஹாவீர்' என்றே சொல்வார்கள்.

'ராம் ராம்' எங்கெங்கே உச்சரித்துக் கொண்டிருந்தாலும் இரகு நாத கீர்த்தனம் எங்கே நடந்தாலும் அங்கெல்லாம் நம் கண்ணுக்குத் தெரியாமல் ஆஞ்சநேயர் தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் சொரிய நின்று கேட்டுக் கொண்டிருப்பார்.

இக்காலத்தில், எமக்கு ஏனைய அருட் குணங்களுடன் அடக் கமாய் இருக்கின்ற பண்புமிக அவசியமாகத் தேவைப்படுகின்றது. எத்தனை வந்தாலும் இவை போதாது என்று உயர் உயரத் துள்ளிக் கொ ண்டேயிருக்கிறோம். இதனால் நாம்புதுப்புது அதிருப்திகளையும் குறைகளையுந் தான் உண்டாக்கிக் கொள்கிறோம். துள்ளாமல் அடங்கிக் கிடந்தால் தான் இறைவனுடைய திருவருள் கிடைக்கும் நிறைந்த நிறைவு அதைநமக்கு ஆஞ்சநேயர் திருவருள் பாலிக்க வேண்டும்.

★

ஸ்ரீ ராம ஜெயம்

## அனுமார் அனுபூதி

அனுமார் அனுபூதி அன்பாய் யான்பாடத்
தனு வாள் சங்கு ஆழி கதை தாங்கி — மனுமோர்
புருடன் திருவடிகள் பொற்புய மேற் கொள்ளும்
கருடன் திருவடிகள் காப்பு

### வித்தையும் பக்தியும் உண்டாக

ஆதிப் பரமான இராமன் உயர்
சோதிப் பதமே தொழு தூயவனே
நீதித் துணையே அனுமந்த நினை
ஓதித் தொழ என்னை உகந்தருளே

### வீரம் உண்டாக

சுட்டாய் புரமூன்றவை தூள் எளவே
விட்டாய் உதை காலனை வீழ் தருமாறு
அட்டாய் மதனாக முன் மாருதி பின்
இட்டாய் எரி துட்டர் இலங்கையினே

### நிலக்காவல்

சவத்தே பொருகின்ற நிசாசரரைக்
கொலத் தேறிய வானர கோளரிதான்
நலத்தே எனை நண்ண நயந்து நனி
நிலத்தே தனி நின்று புரந்திடுமே

### அடைக்கலம்

உய்யா உடல் உய்யும் மருத்து மலைக்
கையா அனுமந்த கலா நிதியே
மையார் களனாகிய வானவனே
ஐயா அடியேன் உன் அடைக்கலமே

### சரணாகதம்

சரணம் சரணம் தரும் அன்புடனே
சரணம் சரணம் தமியேன் உனதாள்
சரணம் சரணம் தயைசெய்து எனையாள்
சரணம் சரணம் தனிமாருதியே

ஸ்ரீ ஆஞ்சநேயசுவாமி திருவடிகளே சரணம்! சரணம், சரணம், சரணம்.
ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமிக்கு!......ஜெய்!!

**ஆயர்பாடி ஆச்சிர வெளியீடு**

மாவிட்டபுரம் - தெல்லிப்பழை

# ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ சீதாராம மங்கள வாழ்த்துக்கள்

பயஹர மங்கள தசரத ராம
ஜெய ஜெய மங்கள சீதா ராம
மங்களகர ஜெய மங்கள ராம
ஸங்கத ஸுபவிபவோதய ராம
ஆனந் தாம்ருத வர்ஷக ராம
ஆஸ்ரித வத்ஸல ஜய ஜய ராம
ரகுபதி ராகவ ராஜா ராம
பதீத பாவன சீதா ராம
ராம ராம ஜய ராஜா ராம
ராம ராம ஜய சீதா ராம

ஸ்ரீராம நாமம் சர்வலோக இரட்சகம்

நன்மையும் செல்வமும் எந்நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம என்ற இரண்டெழுத்தினால்.

ஓராயிரம் மகம்புரி பயனையுய்க்குமே
நராதிபர் செல்வமும் புகழும் நல்குமே
விரா எனும் பாவங்களை வேர் அறுக்குமே
ராம என்ற ஒரு மொழி இயம்பும் காலையே.

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்குகண்டயலான் ஊரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன் எம்மை அளித்துக்காப்பான்.

ஸ்ரீ ஆஞ்சனேய சுவாமி திருவடிகளே சரணம்

ஓம் ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெயஜெயராம்



பச்சை மாமலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்
தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

KUMARAN PRESS, 201, Dam Street, Colombo-12.